**தேதி :** 05.02.2026 **SC.No. :** 259/2022 PW **:2** முத்துராமன்

**(1, 3, 4 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

நாங்கள் எல்லோரும் இருசக்கரவாகனத்தில் சென்றோம். 2 இருசக்கரவாகனத்தில் சென்றோம். எதிரியை கைது செய்ததாக கூறியுள்ள இடத்திலிருந்து 100 மீட்டர் தூரத்தில் இரயில்வே கேட் உள்ளது என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் இரயில்வே கேட் கீப்பரை அழைக்கவில்லை. எதிரிகளை காவல்நிலையத்திற்கு ஜீப்பில் அழைத்து வந்தோம். நாங்கள் தகவல் சொன்ன பிறகு ஜீப் வந்தது. எதிரிகளை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து பொய் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. 1 ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

<u>3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

பாக்கெட் டைரியை பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். ஆய்வாளர் பாக்கெட் டைரியை கேட்கவில்லை. யார், யார் எந்தெந்த வாகனத்தில் சென்றார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. தனி அறிக்கையை உதவி ஆய்வாளர் கைப்பட எழுதினார்.

அரிவாள், கம்பி ஆகியவற்றின் நீளம், அகலம் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய பைக்கை எவ்வாறு காவல்நிலையம் கொண்டு வந்தோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. எதிரிகள் வைத்திருந்ததாக சொல்லப்பட்டுள்ள வாகனத்தை யார் காவல்நிலையத்திற்கு ஓட்டி

வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. கம்பி, கடப்பாறைகளை எந்த எதிரி கொண்டு வந்தார் என்று எனக்கு தெரியாது. எந்த எதிரி நகைக்கடையில் கொள்ளையடிக்க செல்வதாக திட்டம்போட்டார் என்று குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது. அந்த கட்டடத்தின் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது.

நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், தனி அறிக்கை எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திலிருந்து சான்று பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றாலும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சான்றுபொருட்களுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது வேறு வழக்குகள் எங்கள் காவல்நிலையத்தில் இருந்ததா? என்று எனக்கு தெரியாது. புள்ளிவிபரக்கணக்கிற்காக பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டு, குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் எதிரிகளை கைது செய்ய ஏதுவாக போடப்பட்டது என்றால் சரியல்ல.

**5 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையானது, 5ம் எதிரியின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

**மறுவிசாரணை** – இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:42:59 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 259/2022**
**வழக்கு சாட்சி PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வடிவேல்முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | வெள்ளச்சாமி | தொழில் | : | தலைமைக்காவலர் |
| கிராமம் | : | அச்சன்புதூர் | வயது | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of February 5th, 2026.

**(1, 3, 4 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். இதர எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல்விசாரணை** –

நான் தற்போது அச்சன்புதூர் காவல்நிலையத்தில் தலைமைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். 08.10.2017 அன்று நான் உதவி ஆய்வாளர் சேகனா, சார்பு ஆய்வாளர் சிலுவை அந்தோணி, காவலர்கள் முத்துமாரி, முத்துராமன், சத்யராகவேந்திரன் ஆகியோர்கள் தென்காசி பகுதியில் குற்றங்கள் நடவாமல் இருக்க தடுக்க வேண்டி, அன்றைய தினம் இரவு 02.45 மணிக்கு தென்காசி – ஆய்க்குடி ரோட்டிலுள்ள இரயில்வே கேட் அருகே வந்தபோது, இரயில்வே கேட்டிற்கு கிழக்கே 100 அடி தூரத்தில் ஒரு பாழடைந்த கட்டடத்திற்கு முன்பு மறைவாக 2 பைக்குகள் நின்றிருந்ததை பார்த்தவுடன், அங்கு சென்று நாங்கள் பார்த்தபோது புதருக்குள் சில நபர்கள் தங்களுக்குள்ளாகவே பேசிக்கொள்ளும் சத்தம் கேட்டு அந்த பாழடைந்த கட்டிடம் சென்று அவர்கள் பேசுவதை கேட்டபோது, அவர்கள் தென்காசியிலுள்ள ஏதாவது ஒரு நகைக்கடையை உடைத்து திருட வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தவர்களை போலீஸ்

பார்ட்டிகளாகிய நாங்கள் அவர்களை மடக்கி பிடித்து விசாரிக்கையில் தங்களின் பெயர், முகவரியை மாற்றி, மாற்றி கூறினார்கள். உதவி ஆய்வாளர் விசாரணையில் அவர்கள் (1). பால்தினகரன், ஊர்மேலழகியான், (2). வசந்தகுமார், கல்லிடைக்குறிச்சி, (3).மகேந்திரன், அயன்சிங்கம்பட்டி, (4). ராஜேஷ்கண்ணா, கல்லிடைக்குறிச்சி, (5).சேகர், இலஞ்சி, (6).ராஜா, இலஞ்சி எனத் தெரிய வந்தது.

அவர்கள் வைத்திருந்த 2 இருசக்கரவாகனங்களை சோதனை செய்து பார்த்தபோது, அதில் இரு மங்கி குல்லாக்கள், 2 கை உறைகள், இரண்டு மிளகாய் பொடி பாக்கெட்டுகள், ஒரு அரிவாள் இருந்தது. தரையில் ஒரு சிறிய பாறைக்கம்பியும், ஆணி பிடுங்கக்கூடிய மற்றொரு சிறிய கம்பியும் பைக்கிற்கு அருகே கீழே கிடந்தது. மேற்படி நபர்கள் அதிகாலையில் தென்காசியிலுள்ள ஒரு நகைக்கடையில் கள்ளக்களவு செய்ய வேண்டும் என்று சதித்திட்டம் தீட்டி ஆயத்தமாகி கொண்டிருந்த விபரம் எங்களுக்கு தெரிய வந்தமையால் அவர்களையும், மேற்படி சொத்துக்களையும் நாங்கள் தக்க பாதுகாப்புடன் தென்காசி காவல்நிலையம் அதிகாலை 04.30 மணிக்கு கொண்டு வந்து அங்கு ஆஜரில் இருந்த ஆய்வாளர் அவர்களிடம் மேற்படி நபர்களையும் சொத்துக்களையும் ஒப்படைத்து, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி உதவி ஆய்வாளர் தனி அறிக்கை சமர்பித்தார். மேற்படி எதிரிகளை கைது செய்ய ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

நாங்கள் எல்லோரும் இருசக்கரவாகனத்தில் சென்றோம். 3 இருசக்கரவாகனத்தில் சென்றோம். எதிரியை கைது செய்ததாக கூறியுள்ள இடத்திலிருந்து 100 அடி தூரத்தில் இரயில்வே கேட் உள்ளது. உதவி

ஆய்வாளர் இரயில்வே கேட் கீப்பரை அழைக்கவில்லை. எதிரிகளை காவல்நிலையத்திற்கு பைக்கில் அழைத்து வந்தோம். எதிரிகளை காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து பொய் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>3, 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

பாக்கெட் டைரியை பராமரிப்பது வழக்கம் என்றால் சரிதான். ஆய்வாளர் பாக்கெட் டைரியை கேட்கவில்லை. யார், யார் எந்தெந்த வாகனத்தில் சென்றார்கள் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. தனி அறிக்கையை உதவி ஆய்வாளர் கைப்பட எழுதினார்.

அரிவாள், கம்பி ஆகியவற்றின் நீளம், அகலம் நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய பைக்கை எவ்வாறு காவல்நிலையம் கொண்டு வந்தோம் என்று ஆய்வாளர் விசாரணையில் சொல்லவில்லை. எதிரிகள் வைத்திருந்ததாக சொல்லப்பட்டுள்ள வாகனத்தை யார் காவல்நிலையத்திற்கு ஓட்டி வந்தார்கள் என்றால் சத்யராகவேந்தர் என்ற போலீசார் ஓட்டிவந்தார். கம்பி, கடப்பாறைகளை எந்த எதிரி கொண்டு வந்தார் என்று எனக்கு தெரியாது. எந்த எதிரி நகைக்கடையில் கொள்ளையடிக்க செல்வதாக திட்டம்போட்டார் என்று குறிப்பிட்டு என்னால் சொல்ல முடியாது. அந்த கட்டடத்தின் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது.

நான் சொன்ன நாள், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், தனி அறிக்கை எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திலிருந்து சான்று பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை என்றாலும், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட

சான்றுபொருட்களுக்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது வேறு வழக்குகள் எங்கள் காவல்நிலையத்தில் இருந்ததா? என்று எனக்கு தெரியாது. புள்ளிவிபரக்கணக்கிற்காக பொய்யாக இந்த வழக்கு போடப்பட்டு, குண்டர் தடுப்புச்சட்டத்தின் கீழ் எதிரிகளை கைது செய்ய ஏதுவாக போடப்பட்டது என்றால் சரியல்ல.

**5 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(இதர எதிரிகளின் குறுக்கு விசாரணையானது, 5ம் எதிரியின் குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.)

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.07 14:43:10 +0530